இலங்கைப் பாராளுமன்றம்

# சட்ட விவகாரம் மற்றும் (ஊழலுக்கெதிரான) ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

குற்றவியல் நீதி வழங்குதலை துரிதமாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்ளல் தொடர்பான விதப்புரைகள் தொடர்பிலான அறிக்கை

2017 செப்தெம்பர் மாதம் 20 ஆம் புதன்கிழமை

# சட்ட விவகாரம் மற்றும் ஊடகத்துறை (ஊழலுக்கெதிரான) பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

நீதிமன்ற மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு வெகுசன ஊடக அமைச்சுகளின் அலுவல்களை கண்காணித்தல், அதன் மேம்பாடு, விளைத்திறன் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை மதிப்பிடல், கண்காணித்தல் மற்றும் தொடர்ந்து மீளாய்வதற்காக சட்ட விவகாரம் மற்றும் ஊடகத்துறை பற்றிய (ஊழலுக்கெதிரான) துறைசார் மேற்பார்வைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## சட்ட விவகாரம் மற்றும் ஊடகத்துறை பற்றிய (ஊழலுக்கெதிரான) துறைசார் மேற்பார்வைக் குழுவின் அங்கத்தவர்கள்

கௌரவ அஜித் மான்னப்பெரும (தவிசாளர்)
கௌரவ அஜித் பி .பெரேரா
கௌரவ ரன்ஜன் ராமநாயக்க
கௌரவ நிமல் லான்சா
கௌரவ பாலித குமார தெவரப்பெரும
கௌரவ விஜித ஹேரத்
கௌரவ டலஸ் அழகப்பெரும
கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்
கௌரவ திலும் அமுணுகம
கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா
கௌரவ எம்.ஏ .சுமந்திரன்
கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன
கௌரவ மயில்வாகனம் திலகராஜா
கௌரவ அங்கஜன் இராமநாதன்
கௌரவ (கலாநிதி (ஜயம்பதி விக்ரமரத்ன
கௌரவ ஹேசா விதானகே
கௌரவ ச .வியாழேந்திரன்
கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்
கௌரவ எம்.எச்.எம் .சல்மான்
கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி

## அதிகாரங்கள்

பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் ஒன்றான இக் குழுவிற்கு உள்ள அதிகாரங்கள் 2015 திசெம்பர் 19 ஆம் திகதி இலங்கை பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.குறிப்பிட்ட பிரேரணையை www.parliament.lk என்ற இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

## வெளியீடுகள்

குழுவின் அறிக்கைகள் மற்றும் வெளியீடுகள் யாவும் பாராளுமன்ற கட்டளைக்கு அமைய பாராளுமன்ற குழு அலுவலகத்தினால் வெளியிடப்படும். குழு அலுவலகத்தின் வெளியீடுகள் யாவற்றையும் ( பத்திரிகை விளம்பரங்கள் உட்பட்ட) பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளமான www.parliament.lk ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

## குழு அலுவலகர்கள்

திரு.டிக்கிரி கே. ஜயதிலக்க- பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம், திரு.ஜகத் கஜவீர ஆரச்சி- பணிப்பாளர் (சட்டவாக்க சேவைகள்), திருமதி இந்திரா திஸாநாயக்க- உதவி பணிப்பாளர்(நிருவாகம்) -குழு அலுவலகம், திருமதி சித்திரா புலத்சிங்கள- பிரதான உத்தியோகத்தர், திருமதி ரூபானி த சொய்சா- உதவி பிரதான உத்தியோகத்தர்.

## அறிவித்தல்

சகல ஆவணங்களையும் சட்ட விவகாரம் மற்றும் (ஊழலுக்கெதிரான) ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அலுவலகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுரம், கோட்டே என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பொதுவான விசாரணைகளுக்காக 011 2777100 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

உள்ளடக்கம்

பக்கம்

சாராம்சம்

1. அறிமுகம் 1

2. குழுவிற்கு அழைக்கப்பட்ட அமைச்சுக்கள்,திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் 1

3. சாட்சியங்கள்2

4. பரிசீலனை செய்யப்பட்ட அறிக்கைகள் 2

5. இலங்கையில் குற்றவியல் நீதி வழங்கும் செயற்பாட்டில் பாரதூரமான தாமதங்கள் உண்மையிலேயே காணப்படுகின்றதா? 3

6. செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் 4

7. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகப்பணிகளின் விளைதிறனை விருத்திசெய்துகொள்ளுதல் 5

8. நீதி மன்றத்தில் வழக்குகள் தாமதமாவதற்கும், ஒரு வழக்கு நீண்ட காலம் விசாரிக்கப்படுவதற்கும் காரணமான சுருக்கெழுத்தாளர் பற்றாக்குறைக்கு தீர்வு காணல் 9

9. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல் பற்றிய பிரேரணைகள் 10

**10.** குற்றங்கள் மூலம் சம்பாதித்த செல்வத்தை மீள கையகப்படுத்தல் 10

## சுருக்கம்

இலங்கை நீதிமன்ற முறைமையின் வெற்றிகரமான செயலாற்றுகையினைத் தொடர்ந்தும் பேணப்படுவதற்கு மிகவும் சரியானதும் நியாயமானதுமான நீதிமன்ற தீர்ப்புகள் மக்களுக்கு தாமதமின்றி வழங்கப்பட வேண்டும். அது தொடர்பில் சட்டத்தின் முன்னோடிகளாக செயற்படும் சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு என்பன வினைத்திறனுடன் செயற்படுவதற்குத் தேவையான சட்டத் தேவைப்பாடுகளை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பாகும். தற்கால சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் இந் நிறுவனங்கள் செயற்படுவதற்குத் தேவையான புறச்சூழலை அமைப்பதன் ஊடாக அந் நிறுவனங்களின் செயற்றிறனானது வினைதிறனுடனும் இற்றைப்படுத்தப்படுத்தப்பட வகையிலும் மேம்படுத்தப்படவுள்ளதனால் அதற்கான தேவைகளை அடையாளம் கண்டு பொருத்தமான சிபாரிசுகளை முன்வைத்தல் இவ் அறிக்கையை சமர்ப்பிப்பதன் நோக்கமாகும்.

### 1. <u>அறிமுகம்</u>

குற்றவியல் நீதி வழங்குதல் தொடர்பில் இலங்கையில் நிலவுகின்ற தாமதத்தைக் குறைத்துக் கொள்ளல் மற்றும் குற்றவியல் நீதிச் செயற்பாட்டின் வினைத்திறனை விருத்திசெய்து குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் மாத்திரமன்றி ஒட்டுமொத்தச் சமூகத்திற்குமே நீதி நிலைநாட்டப்பட வேண்டுமென்ற நிலைப்பாடு இந்த துறைசார் மேற்பார்வைக் குழுவினால் மேற்படி விடயம் தொடர்பான தனித்துவமான புலனாய்வொன்று மேற்கொள்ளப்பட அடிப்படைக் காரணமாக அமைந்தது. ஆட்கொலை, பாலியல் வல்லுறவு மற்றும் சிறுவர் துர்ப்பிரயோகம் போன்ற பாரதூரமான குற்றச்செயல்கள் மற்றும் குறிப்பாக அரச உடைமைகளுடன் தொடர்புடைய மோசடிகள், இலஞ்சம், ஊழல் மற்றும் பணம் தூய்தாக்கல் பற்றிய வழக்கு விசாரணைகள் மிகவும் தாமதமாகின்றமை தொடர்பில் சமூகத்தில் தோன்றியுள்ள கடுமையான எதிர்ப்பு துறைசார் மேற்பார்வைக் குழுவின் விசேட கவனத்திற்கு இலக்காகியது. ஆதலால் குற்றவியல் நீதி வழங்கலில் நிலவுகின்ற தாமதங்களுக்கான காரணங்களைக் கண்டறிதலானது அதன் மூலமாக வெளியாகின்ற சிக்கல்களைத் தீர்த்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களைப் போன்றே குற்றச்செயல்களுக்கு பலியானவர்களுக்கும் நியாயம் வழங்குகின்ற வினைத்திறனுடைய நீதி நிலைநாட்டல் செயற்பாடொன்றை நிறுவுதல் தொடர்பில் குழுவின் கவனஞ் செலுத்தப்பட்டது.

### 2. குழுவிற்கு அழைக்கப்பட்ட அமைச்சுக்கள்,திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்கள்

- நீதிமன்ற அமைச்சு
- சட்ட மாஅதிபர் திணைக்களம்
- சட்ட வரைபாக்கல் திணைக்களம்
- இலஞ்சம் மற்றும் ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
- இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்
- பொது நிருவாக அமைச்சு, பணிப்பாளர் நாயகம்- ஒருங்கிணைந்த பணிப்பாளர்

### 3. <u>சாட்சியங்கள்</u>

மேற்படி விடயங்கள் தொடர்பில் துறைசார் மேற்பார்வைக்குழு 2017.08.01, 2017.08.23, 2017.08.31 மற்றும் 2018. 09.08 ஆகிய திகதிகளில் கூடிக்கலந்துரையாடியதோடு கீழே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து சாட்சியங்களும் கருத்துகளும் பெறப்பட்டன.

i. சட்டத்துறை தலைமை அதிபதி, சனாதிபதி சட்டத்தரணி திரு. ஜயந்தா ஜயசூரிய
ii. இலஞ்சம் அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், சனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன
iii. மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சனாதிபதி சட்டத்தரணி திரு. யசந்த கோதாகொட
iv. நீதி அமைச்சின் செயலாளர், திரு. பத்மசிறி ஜயமான்ன
v. இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவம்செய்து அதன் பொருளாளர், சட்டத்தரணி திரு. சுஜீவலால் தஹநாயக்க

## 4. <u>பரிசீலனை செய்யப்பட்ட அறிக்கைகள்</u>

அதில் மேலே குறிப்பிட்ட அறிக்கைகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிட்டுள்ள அறிக்கைகளும் ஆவணங்களும் இந்த துறைசார் மேற்பார்வைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டன.

i. தண்டனைச் சட்டக்கோவை மற்றும் குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையை திருத்தியமைத்தல் தொடர்பாக நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர் பீ.பி. அலுவிஹாரே அவர்களின் தலைமையிலான விசேட குழுவினால் (Special Committee on Amending the Penal code and the Code of Criminal Procedure Act) வெளியிடப்பட்ட 2017.02.09 ஆந் திகதிய இரண்டாவது இடைக்கால அறிக்கை.
ii. இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்ட 2017.08.30 ஆம் திகதிய “இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கான முன்மொழிவுகள்” எனும் அறிக்கை .
iii. 2017.08.23 ஆம் திகதி இம் மேற்பார்வைக் குழுவின் பணிப்பின்படி சட்ட மா அதிபரினால் முன்வைக்கப்பட்ட 2017.08.30 ஆம் திகதிய “சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் விளைதிறனை மேம்படுத்தல் தொடர்பான சட்ட மாஅதிபரின் அறிக்கை” எனும் ஆவணம்.
iv. சட்ட மாஅதிபர் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளரினால் பொது நிருவாக அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 2015.08.25, 2015.10.19 மற்றும் 2015.11.30 ஆம் திகதிகளைக் கொண்ட கடிதங்களின் பிரதிகள்.

v. நீதி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் சுருக்கெழுத்தாளர் பதவிகள் தொடர்பான வெற்றிடங்களை நிரப்புவது பற்றிய 2017.08.25 ஆம் திகதிய அறிக்கை

vi. "Criminal Justice System Of Sri Lanka, A Pragmatic approach to enhancing its efficiency" எனும் தலைப்பில் மேலதிக மன்றாடியார் அதிபதி, சனாதிபதி சட்டத்தரணி திரு. யசந்த கோதாகொட வினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை.

முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் சாட்சியங்களை கவனத்திற் கொள்கையில் பாதிப்புற்றோருக்கும், எதிராளிகளுக்கும், இலங்கையின் அனைத்து பிரசைகளுக்கும் நீதி வழங்கப்படுவதற்கான வினைத்திறனுள்ள குற்றவியல் நீதியை நிலை நாட்டக்கூடிய நடைமுறையை உறுதிப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது தெளிவாகியது.

## 5. <u>இலங்கையில் குற்றவியல் நீதி வழங்கும் செயற்பாட்டில் பாரதூரமான தாமதங்கள் உண்மையிலேயே காணப்படுகின்றதா?</u>

உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. பீ.பி. அலுவிஹாரேயின் தலைமையிலான தண்டனைச் சட்டக் கோவையில் மற்றும் குற்றவியல் நடவடிக்கை முறைக் கோவையில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் 2017.02.09 ஆம் திகதிய அறிக்கையின் மூலம் பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டிருந்தன.

I. குற்றச் செயல் நடைபெற்ற திகதிக்கும் குற்றப்பகர்வை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் திகதிக்கும் இடையிலான காலம் (சராசரியாக) - 4.7 வருடங்கள்

II. குற்றப் பகர்வு தாக்கல் செய்யப்படும் நாள் தொடக்கம் உண்மையாகவே உரிய வழக்கின் வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்படும் திகதிக்கும் இடையிலான காலம் (சராசரியாக) - 3.7 வருடங்கள்

iii. மேல்நீதிமன்றத்தில் வழக்கின் சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்படுவதற்கும் வழக்கின் தீர்ப்பு வழங்குதலுக்கும் இடையிலான காலம் (சராசரி) – 1.8 ஆண்டுகள்

அதற்கமைய மேல்நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டிய பாரிய குற்றம் நடந்த திகதியிலிருந்து அவ்வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு முடிவடைகின்ற திகதிக்கிடையிலான காலத்தின் சராசரி அளவு – 10.2 ஆண்டுகள்.

மேலும் அவ்வறிக்கையின் பிரகாரம் மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வழக்குக்கு பின் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உயர்நீதிமன்றத்திற்கும் உள்ள இரண்டு மேன்முறையீட்டு வாய்ப்புகள் முடிவடைய சராசரியாக மேலும் ஏழு ஆண்டுகள் (07 ) எடுக்கும். (Entire Criminal Justice Response to serious Crimes seems to consume, on average approximately 17 years) குற்றவியல் நீதி வழங்கலில்

நிலவுகின்ற இந்த பாரிய மற்றும் வெட்கித்தலைகுனிய வேண்டிய தாமதத்தை இல்லாதொழிக்க துரிதமாக நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் என்பதும், அவ்வாறு செயற்படும் போது குற்றவாளிக்கும் குற்றத்திற்கு பலியானவருக்கும் நியாயமான வழக்கு விசாரணையொன்றுக்கு உள்ள (Fair trial) உரிமையை இழந்து விடாதிருப்பதற்கு ஆவனசெய்தல் வேண்டும் என்பதும் குழுவின் கருத்தாக இருந்தது.

குறிப்பாக சிக்கலான விடயங்களைக்கொண்டுள்ள பெருந்தொகையான ஆவணங்களும் பெருமளவிலான சாட்சியளிப்பவர்களையும் சாட்சிகளாக முன்வைப்பதற்காக எதிர்பார்க்கப்படும் இலஞ்சம், ஊழல் மற்றும் பணம் தூய்தாக்கல் போன்ற குற்றங்களைக் கொண்ட வழக்குகளின் போது வழக்கு நடவடிக்கைகள் மிகவும் தாமதமடையும் அபாயம் இருக்கின்றதென்பது இக்குழுவின்முன் சாட்சியமளித்தவர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களின் மூலமாக வெளியாகியுள்ளது. ஆகையால் தற்போது குவிந்துள்ள வழக்குகளை துரிதமாக முடிப்பதற்காகவும், எதிர்காலத்தில் தோன்றக்கூடிய பாரதூரமான குற்றச்சாட்டுகள் தொடர்பான குற்றப் பகர்வுகளை துரிதமாக தீர்த்துவைக்கவும் பொதுவாக இலங்கையில் குற்றவியல் நீதி வழங்கல் செயற்பாட்டினை வலுப்படுத்துவதும், பல்வேறு முறையியல்களை சமாந்திரமாக பயன்படுத்துதலும் அத்தியவாசியமாகும் என்பது குழுவின் கருத்தாக இருந்தது.

### 6) <u>செயற்பாட்டினை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள்</u>

i. ரூபா ஐந்து மில்லியனுக்கும் அதிக பெறுமதியைக் கொண்ட இலஞ்சம், சொத்துக்கள், ஊழல், பணம் தூய்தாக்கல், மோசடி, குற்றவியல் முறைகேடான பாவனை, குற்றவியல் நம்பிக்கைத் துரோகம், போலி ஆவணங்களை தயாரித்தல் மற்றும் அத்தகைய முறைகேடுகள் தொடர்பாக, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டத்தின் 12 ஆவது விரிவுக்கமைய விசேட சட்ட ஆய விசாரணைகளை (Trial at Bar) கட்டாயமாக நடாத்தத் தேவையான நடவடிக்கைகள் சட்ட மாஅதிபரால் மேற்கொள்ளப்படுதலும் மற்றும் அது தொடர்பாக கௌரவ பிரதம நீதி அரசரை சட்ட மாஅதிபர் அறிவுறுத்துதலும்.

ii. அரசியலமைப்பின் 105 (1) (இ) உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்தினால் ஊழலுக்கெதிரான மேல்நீதிமன்றமொன்று (anti-corruption high court) புதிதாக தாபிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய மேல்நீதிமன்றத்தினால் தற்போதுள்ள சட்டங்கள் மூலமாக பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள தவறுகள் தொடர்பாக மேல்நீதிமன்ற நீதியரசர்கள் மூவரைக்கொண்டுள்ள மூன்று நீதிச் சபைகளால் தொடர்ச்சியாக (day to day trial) வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படல்.

iii. மேல்நீதிமன்ற நீதியரசர்களின் ஆகக்கூடிய எண்ணிக்கையை 110 வரை அதிகரித்தலும் அதற்கமைய 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதிமன்ற ஏற்பாட்டுச் சட்டத்தை உடனடியாக திருத்தியமைத்தலும்.

iv. உயர்நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு முன்னர் நடைபெறும்

செயன்முறையை துரிதப்படுத்தி தினந்தோறும் வழக்கு விசாசணை நடாத்துவதற்கு இயலக்கூடியதொரு சூழமைவை கட்டியெழுப்புவதை இலகுவாக்கும் பொருட்டு பதிவுசெய்துகொள்வதற்கான நீதிபதிகளை (Recorder Judges) நியமித்தல்

v. ஆட்கொலைபெண்களை பாலியல் ,ட்கொலைக்கு முயற்சித்தல் , வல்லுறவுக்குட்படுத்துதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அனைத்து (1) 263 சட்டக்கோவையின் தவறுகளுக்கும் ஏற்புடைய தண்டனைச் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு மேல்நீதிமன்ற வழக்கொன்று ஆரம்பிக்கப்பட்ட பின்னர் தினந்தோறும் தொடர்ச்சியாக இந்த வழக்கு விசாரணைகளை மேற்கொள்ளுதல் )day to day trialபற்றிய கட்டாய பணிப்புரையை உண் (மையாகவே நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

vi. வழக்குகள் பெருமளவு குவிந்து கிடக்கும் மேல்நீதிமன்றங்களாக காணப்படும் அநுராதபுரம்கம்பஹா மற்றும் இரத்தினபுரி போன்ற ஒவ்வொரு .கண்டி , பிரதேசங்களுக்கும் ஒரு மேலதிக மேல்நீதிமன்றமும் கொழும்பு பிரதேசத்திற்குள் 10 மேல்நீதிமன்றங்களும் என்ற வகையில் புதிதாக 5 றும்இயங்கக்கூடிய மற் மேல்நீதிமன்றங்களை ஆரம்பித்தல்

vii. யோக வழக்குகளை விசாரிப்பதற்காக மாத்திரம் சிறுவர் துஷ்பிர மட்டுப்படுத்தப்பட்ட மேல்நீதிமன்றமொன்று தற்போது அநுராதபுரத்தில் தொழிற்படுகின்றதுஅவ்வாறாக . சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை விசாரிப்பதற்காக தனித்துவமான விதத்தில் ஒதுக்கப்பட்ட மேல்நீதிமன்றமொன்றும் கொழும்பில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

## 7. <u>சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகப்பணிகளின் விளைதிறனை விருத்திசெய்துகொள்ளுதல்</u>

சட்ட மா அதிபர் திணைக்களம் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலம் இலங்கையில் நீதியை நிலைநாட்டும் பணியில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த பணியினை ஈடேற்றும் மிகச்சிறந்த அரச நிறுவனமாகும்குற்றவியல் மற்றும் சிவில் சட்டத் துறை . ஆகிய இரண்டிற்கும் ஏற்புடைய வகையில் அரசின் சார்பில் ஆஜராகுதல் சட்ட மா 19 .அதிபரின் பொறுப்பாகும்ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சட்ட மா அதிபர் பதவியின் சுயாதீனத்தன்மை மீண்டும் ஒரு முறை உறுதிப்படுத்தப்பட்டதுடன் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு சாட்டப்பட்ட பணியினை நிறைவேற்றுதல் போதியளவு துரிதமாக இடம்பெறாமை பற்றி இந்நிறுவனம் மக்களின் விமர்சனத்திற்கு

உள்ளாவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளதுஇந்நிலைமை பற்றி தற்போதைய . சட்ட மா அதிபர் இக்குழுவின் முன் சாட்சியமளித்ததுடன் பின்னர் குழுவின் ஆலோசனையின் படி ஆம் திகதிய எழுத்திலான அறிக்கையும் 2017.08.30 .சமர்ப்பிக்கப்பட்டது

மனித வளங்கள் போதியளவு இல்லாமை நிறைவேற்றப்பட்ட சேவைக்கு போதியளவு சம்பளம் அரசின் வழக்குரைஞர்களுக்கு கிடைக்காமை ,வெற்றிடங்களை உரிய நேரத்தில் நிரப்புவதற்கு இயலாமை மற்றும் பொறுப்பு வாய்ந்த தொழில்வாண்மையாளர்களாக சௌகரியமாக தங்களது கடமைகளை நிறைவேற்றுவதற்கு வசதிகள் இல்லாமை போன்ற பிரச்சினைகள் இக்குழுவினால் இனங்காணப்பட்டது.

மிகவும் குறைந்த சம்பளத்திற்கு அதிகமான வேலைகளை நிறைவேற்றும் அரச வழக்குரைஞர்களின் சேவை இக்குழுவின் பாராட்டிற்கு உள்ளாகியது என்பதனை குறிப்பிடுதல் வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களத்திற்குரியதாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ) குற்றப்பகர்வுகள் புதிதாக கோப்பிடப்படும் வேகம் குறைவடைதல் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் குவிந்து காணப்பட்ட கோப்புக்கள் மேற்கொண்டும் அவ்வாறாகவே காணப்படுதல்.

ஆ) வழக்குகளைக் கையாள்கின்ற அரச சட்டவாதிகளுக்கு ஒவ்வொரு தினங்களில் அழைக்கப்படவுள்ள வழக்குகள் சம்பந்தமாக போதியளவில் தயாராக முடியாமை.

இ) சட்டமா அதிபர் திணைக்களத்திலுள்ள அரச சட்டவாதிகளுக்கான பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களின் பொருட்டு திறமையான புதிய சட்டத்தரணிகள் விண்ணப்பங்களை மேற்கொள்ளாததொரு போக்கு ஏற்பட்டுள்ளமை.

சட்ட மா அதிபர் திணைக்களம் கடமைகளை நிறைவேற்றும் விளைதிறனை மேம்படுத்துவதற்காகவும் சட்ட மா அதிபர் திணைக்களமானது அரச சேவையில் கைப்பற்றியிருந்த அபிமானத்துடன்கூடிய நிலைமையினை மீண்டும் ஏற்படுத்துவதற்குமாக முக்கியத்துவம் வாய்ந்த பல முன்மொழிவுகள் சட்ட மா அதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ள ஆம் திகதிய அறிக்கையில் 2017.08.30 குறித்த ஆவணமானது இவ்வறிக்கையின் ஒரு இண) .காட்டப்பட்டுள்ளனபாக தரப்பட்டுள்ளது(.

சட்டமா அதிபரினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையும், நீதி அமைச்சு சார்பாக அவ்வமைச்சின் செயலாளரினால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களும், இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சார்பாக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களும் ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர் பின்வரும் முன்மொழிவுகள் இக்குழுவினால் முன்வைக்கப்படுகின்றனகுற்றவியல் நீதியினை நிலைநிறுத்துவதற்குரியதாக நாட்டில் . சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் அரசாங்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள விமர்சனங்களுக்கான பதிலிறுப்பாக பின்வரும் முன்மொழிவுகளை தேசிய ரீதியில்

முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களாகக் கருதி தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டுமென இக்குழு விதந்துரைக்கின்றது .

i. சட்ட மா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த சகல சட்ட அலுவலர்களினதும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் என்பன உடனடியாக மீள்திருத்தம் செய்யப்பட்டு திணைக்களத்திலுள்ள திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களை மேற்கொண்டும் தக்கவைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதோடு மிகவும் திறமையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான தொழில்சார் கவர்ச்சி ஏற்படுத்தப்படுதலும் வேண்டும்இது பற்றி .ய முன்மொழிவுகள் கடந்த அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லையெனத் தெரிகின்றது .

அரச சட்டவாதியாக ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்படுகின்ற ஒருவரின் ) 2016/5 ஆரம்பச் சம்பளமானதுஅரச முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையில் நீதவான்களுக்குரிய JS - 1 சம்பளப் படிநிலைக்கு ஒரு படி குறைவாக அமையப்பெறல் வேண்டுமென்பது குழுவின் தீர்மானமாக அமைந்தது(.

ii. அரச சட்டவாதிகள் பதவிக்கான பதவியணியினர் ”அங்கீகரிக்கப்பட்ட“ .வரை அதிகரிக்கப்படுதல் வேண்டும் 218 தொடக்கம் 118 எண்ணிக்கையானது புதிதாக இணை◌ைத்துக்கொள்ளப்படும் சனவரியிலும் 2018 பேர் 50 பேரில் 100 யூன் /மே 2018 பேர் என்ற ரீதியில் 25 பேர் ஒரு தடவைக்கு 50 எஞ்சிய சனவரி மாதத்திலும் இணைத்துக்கொள்ளப்படுதல் 2019 தங்களிலும்மா .வேண்டும்

iii. அரச சட்டவாதிகளை புதிதாக ஆட்சேர்ப்புச் செய்துகொள்வதற்காக விளம்பரங்களை வெளியிடுவதற்கு மேலதிகமாக இலங்கையின் ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சட்டமாணி பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும்போதும் இலங்கை சட்டக் கல்லூரியில் இறுதிப் பரீட்சை சித்தியடையும்போதும் உயர் வகுப்புச் சித்திகளைப் பெற்றுக்கொள்ளும் புதிய சட்டத்தரணிகளை, அரச சட்டவாதிகளை நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் நேர்முகப் பரீட்சைக்கு ஆற்றுப்படுத்துமாறு சட்ட பீடாதிபதிகளுக்கும் இலங்கை சட்டக் கல்லூரியின் அதிபருக்கும் சட்ட மா அதிபர் அறிவித்தல் வேண்டும்.

iv. முடிவுறாத 50 க்கும் மேற்பட்ட குற்றப்பகர்வுகளைக் கொண்ட அனைத்து உயர் நீதிமன்றங்களுக்கும் தற்போதுள்ள அரச சட்டவாதிக்கு மேலதிகமாக மேலும் ஓர் அரச சட்டவாதி வீதம் நியமிக்கப்படுதல் வேண்டும்.

v. நாடு முழுவதிலும் உள்ள மேல் நீதிமன்றங்களில் உள்ள அரச சட்டவாதிகளின் உத்தியோகப்பூர்வ அறைக்காக தற்போதுள்ள அலுவலக உதவியாளர்களுக்கு மேலதிகமாக மேலுமோர் அலுவலக உதவியாளரை நியமித்தல் வேண்டும் என்பதுடன் சுருக்கெழுத்தாளர் ஒருவரையும் நீதிமன்ற எழுதுனர் ஒருவரையும் வழங்குதல் வேண்டும்.

vi. சட்ட மாஅதிபர் திணைக்களத்துக்காக நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடத்தின் பணிகள் 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிவடையவுள்ளதால் புதிய கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடையும் வரை சுமார் 100 உத்தியோகத்தர்களுக்கு போதுமான கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் புதுக்கடை பிரதேசத்துக்கு அருகில் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறான கட்டிடமொன்றில் ஓர் உத்தியோகபூர்வ அறையில் அரச சட்டவாதிகளில் கூடியபட்சம் இரண்டு பேருக்கு மிகவும் வசதியுடன் தமது கடமைகளை மேற்கொள்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

vii. பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் சேவையின் செயலாற்றுத் திறமையை மேம்படுத்துவதற்கும் வழிகோலும் வகையில் சட்ட மாஅதிபர் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்குதல் வேண்டும்.

viii. சட்ட மா அதிபர் திணைக்களத்தில் “தகவல் தொழில்நுட்ப அலகொன்றை” உடனடியாக ஏற்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் நிர்வாகப் பணியினை செயற்திறன் மிக்கதாக மாற்றுதல் வேண்டும்.

ix. சட்ட மா அதிபர் திணைக்களத்தில் நிர்வாகப் பிரிவின் சிரேஷ்ட அரச சட்டவாதியின் மேற்பார்வையின் கீழ் சேவை நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவரின் சேவையை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். இதன் மூலம் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் தற்போது விரிவாக்கப்பட்டுள்ள நிர்வாக நடவடிக்கைகளை சுமுகமாகவும் செயற்றிறனுடனும் சட்ட உத்தியோகத்தர்களின் உற்பத்தித் திறனை அதிகரித்துக்கொள்வதற்கும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

x. சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக முறையான, போதுமான பட்டப்பின் படிப்புக்கான வாய்ப்புக்களையும் ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக சட்ட மா அதிபரின் 2017.08.20 ஆம் திகதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மீது நீதி அமைச்சு விசேடமாக தனது கவனத்தை செலுத்த வெண்டுமென சிபாரிசு செய்யப்படுகின்றது. சட்ட மா அதிபர் திணைக்களம் அரசின் மற்றுமோர் திணைக்களம் மாத்திரம் அல்ல என்றும் அந்த திணைக்களத்துக்குரிய விசேட பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான வசதிகள் மற்றும் சூழலை ஏற்படுத்துதல் அரசின் பொறுப்பு என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இலங்கை மத்திய வங்கி, பாராளுமன்றம் போன்ற நிறுவனங்களுக்குரிய விசேட பொறுப்புக்கள் தொடர்பாக சிந்தித்துப் பார்த்து அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கு சம்பளத்துடன் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். சட்ட மா அதிபர்

திணைக்களத்தையும் அவ்வாறான நிலைக்கு உயர்த்துதலை மிகவும் இலகுவாக நியாயப்படுத்த முடியும் என்பதை வலியுறுத்திக் குறிப்பிடுகின்றோம்.

**8. நீதி மன்றத்தில் வழக்குகள் தாமதமாவதற்கும், ஒரு வழக்கு நீண்ட காலம் விசாரிக்கப்படுவதற்கும் காரணமான சுருக்கெழுத்தாளர் பற்றாக்குறைக்கு தீர்வு காணல்**

சுருக்கெழுத்தாளர்கள் போதிய அளவில் இன்மை சிவில் மற்றும் குற்றவியல் ஆகிய இரண்டு துறைகளிலும் வழக்குகள் தாமதமாவதற்கு பாரியளவில் காரணமாகியுள்ளது. குறிப்பாக, சாட்சிக் குறிப்புக்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாத சிக்கல் மேல் நீதி மன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற பாரதூரமான குற்றவியல் வழக்குகளை நாளாந்தம் (day to day) தொடர்ச்சியாக விசாரிப்பதில் பாரிய தடையாக உள்ளது. இப்பிரச்சினை இனம் காணப்பட்டு நீண்ட காலம் கடந்துள்ளபோதிலும், நீதி அமைச்சும் சம்பந்தப்பட்ட ஏனைய அரச நிறுவனங்களும் உரிய தீர்வுகளை நடைமுறைப்படுத்த தவறியுள்ளன. இது தொடர்பாக நீதி அமைச்சின் செயலாளரது 2017.08.25 திகதிய அறிக்கை ஓர் இணைப்பாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் பின்வரும் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, இவற்றை ஆறு மாத காலத்தினுள் நடைமுறைப்படுத்தி பூர்த்தி செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

i. ஆட்சேர்ப்பு தகைமைகளுக்கு ஏற்புடையதாக க.பொ.த சாதாரண தர கணித பாடத்திற்கு தற்போதுள்ள “விசேட” சித்திக்குப் பதிலாக “சாதாரண” சித்தியை உள்வாங்குதல்.

ii சுருக்கெழுத்தாளர்களை பயிற்றப்பட்ட பணியாளர் (Skilled Labour) களாக கருத முடியுமென்பதால் அவர்களின் சம்பளத்தை MT2 2016 சம்பள அளவுத் திட்டத்திற்கு உயர்த்ததுதல்.

iii. ஆட்சேர்ப்பு வயதெல்லையை 45 வரை அதிகரித்தல்.

iv. சுருக்கெழுத்தாளர் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் நாளாந்தம் கொடுப்பனவுகளைச் செலுத்தும் வகையில் பயிற்றப்படாத பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்து, இவர்கள் பயிற்சி பெற்ற பின்னர் நிரந்தர சேவையில் இணைத்துக்கொள்ளும்போது ஒப்பந்த அடிப்படையில் பயிற்சி பெற்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குதல்.

v. மேல் நீதி மன்றம் ஒவ்வொன்றிலும் வழக்கு நடவடிக்கைகளை ஒலிப் பதிவு செய்தல் (Audio Recording) மற்றும் பேச்சு இனம் காணல் (Speech Recognition) போன்றவற்றை கட்டாயமாக்குதல் அத்துடன் குறிப்புக்களைப் பதிவு செய்யும்போது தேவையான தொழில்நுட்ப வசதிகளை ஏற்படுத்தல்.

vi. ஓய்வுபெற்ற சுருக்கெழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையிலான ஒரு கொடுப்பனவின் அடிப்படையில் உடனடியாக சேவையில் இணைத்தல்.

vii. அரச தொழில்நுட்பக் கல்லூரியில் “சுருக்கெழுத்தாளர்” தொடர்பான கற்கை நெறி ஒன்றை மீண்டும் ஆரம்பித்தல்.

**9. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை வினைத்திறனாக்குதல் பற்றிய பிரேரணைகள்**

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு கடந்த 23 வருட காலத்தில் மேற்கொண்டுள்ள புலனாய்வுகளின் பின்னர், “ஊழல்” குற்றத்திற்காக நீதி மன்றத்தால் பிரதிவாதிகளுக்கு மூன்று சந்தாப்பங்களில் மட்டுமே குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இது இன்றளவில் அந்த ஆணைக்குழு செயலாற்றி வரும் விதத்தையும், அது கொண்டுள்ள குறைந்தளவு அதிகாரம் பற்றிய கவலைக்கிடமானதொரு குறிகாட்டியாக உள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஆணைக்குழுவில் முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு திறமையான சட்டத்தரணிகள் இன்மை பாரிய பிரச்சினையாக இனம்காணப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பின் ஆம் 156 கட்டாய கடப்பாட்டை கொண்டுள்ள ஊழலுக்கு எதிரான சர்வதேச உறுப்புரையின் பிரகாரம் சமவாயத்தின் ஏற்பாடுகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்புடையதாக .உள்நாட்டு சட்டங்களை இயற்றும் பணி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவை வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு ஏற்புடைய ஆம் திகதிய 2017.08.30 இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை இதனுடன் ஓர் இணைப்பாக சமர்ப்பிக்கப்படுவதோடு,

1. ஆம் இலக்க 19 ஆம் ஆண்டின் 1994இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்துக்கு தேவையான திருத்தங்களை 06 மாதங்களுக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டுமென முன்மொழியப்படுகிறது.
2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சட்டத்தை இற்றைப்படுத்துவதற்கு தேவையான சட்ட திருத்தங்களை மாதங்களுக்குள் பாராளுமன்றத்துக்குக்கு 06 .சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டுமென முன்மொழியப்படுகிறது

**10. குற்றங்கள் மூலம் சம்பாதித்த செல்வத்தை மீள கையகப்படுத்தல்**

குற்றங்கள் மூலம் சம்பாதித்த செல்வத்தை மீள அரசாங்கத்தினால் கையகப்படுத்துவதற்கு ஏற்புடைய சட்டங்களை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக கருதி துரிதமாக நிறைவேற்றுதல் வேண்டும்மேற் குறிப்பிட்ட சட்டத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் ,மேலும் . பிரேரிக்கப்பட்டுள்ள இதர சட்டத் திருத்தங்களை துரிதமாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பை நீதி அமைச்சு ஏற்க வேண்டும்.

மேற்படி முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியை மதிப்பீடு செய்து அந்த அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து வாரங்களுக்குள் நிதி 02 அமைசிடம் சமர்ப்பித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த அறிக்கையை ஏற்புடைய விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரான நீதி அமைச்சருக்கும் கௌரவ பிரதம அமைச்சருக்கும் கௌரவ சனாதிபதிக்கும் சமர்ப்பிப்பதற்கு குழு நடவடிக்கை எடுக்கும்.

அத்தோடு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள சிபார்சுகளை நடைமுறைப்படுத்த , அறிக்கை பாராளுமன்றத்துக்கு ,வேண்டியது நீதி அமைச்சின் பொறுப்பு என்பதோடு மாதங்களுக்குள் ஏற்புடைய சிபார்சுகளை முழுமையாக 06 சமர்ப்பிக்கப்பட்டு .நடைமுறைப்படுத்தி முடிக்க வேண்டும்

இந்த அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றத்தை குழு இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யும்.